சர்வதேசத் தீவிரவாதம் பற்றிய
116 திகிலூட்டும் தொடர்

பா.ராகவன்

# மாயவலை



அல் காயிதா தொடங்கி பேட்டை பிஸ்தா, பிச்சுவா பக்கிரி வரைக்கும் உலகில் எந்த ஒரு போராளி தீவிரவாத அமைப்போ, தனித் தீவிரர்களோ, பிரிவினைவாதிகளோ இண்டர்வெல் விடாமல் மாதம் மும்மாரி பொழிந்ததில்லை. இது சரித்திரம். ஒரு தாக்குதலுக்கும் இன்னொரு தாக்குதலுக்கும் கண்டிப்பாக ஓரளவு இடைவெளி விட்டே தீருவார்கள். நமக்கு நன்கு அறிமுகமான 'அமரர்' வீரப்பனை எடுத்துக்கொள்ளுங்கள். ஒவ்வொரு ஜம்போ ப்ராஜக்ட் முடிந்ததும் எத்தனை காலம் ஓய்வெடுத்துக் கொண்டுள்ளார்! இடைப்பட்ட காலத்தில் தீர்த்த யாத்திரை போவது மாதிரி மீடியாக்காரர்கள் மூட்டை முடிச்சுகள், புளிசாதம் எல்லாம் கட்டிக்கொண்டு சத்தியமங்கலம் காட்டுக்குப் போய்வரவாவது கொஞ்சம் அவகாசம் வேண்டியிருந்ததல்லவா?

இடி.ஏ. தவிர்த்த அத்தனை இயக்கங்களுமே இப்படித்தான் இருந்திருக்கின்றன, இயங்கியிருக்கின்றன. இவர்கள் மட்டும்தான் தாக்குதல்களுக்கு இடையே இடைவெளி விடுவதை கவனமாகத் தவிர்த்து வந்திருக்கிறார்கள். பொழுது விடிந்து பேப்பர் புரட்டும்போதெல்லாம் தன்னுடைய பெயர் அதில் எங்காவது ஒரு மூலையில் இடம்பெற்றுவிட வேண்டுமென்பதில் அதி தீவிர கவனம். இதன்பொருட்டு மிகச் சாதாரணத் தாக்குதலுக்கான வாய்ப்புக் கிடைத்தால் கூட இடி.ஏ. தவறவிடுவதில்லை. 'அர்ஜுனா, செயலின் விளைவில் கவனம் வைக்காதே. செய்வது உன் கடமை. அதைத் தவிர இன்னொன்றை நினையாதே' என்று பாஸ்க் மொழியிலும் பகவான் கிருஷ்ண பரமாத்மா பேசியிருக்கிறாரா என்று தெரியவில்லை. ஆனால், அதைத்தான் இடி.ஏ. செய்து வந்திருக்கிறது.

1997-ம் ஆண்டு நிகழ்த்தப்பட்ட ஏஞ்சல் கடத்தல் படுகொலைச் சம்பவம், ஸ்பெயினில் ஏற்படுத்திய பாதிப்புகள் மிகவும் முக்கியமானவை. பிரிவினைவாதிகள் மீது மக்களுக்கு இருந்த மௌன வெறுப்பும் கோபமும் மிக வெளிப்படையாக வெளியே தெரியத் தொடங்கியது அப்போதுதான். இடி.ஏ. மீதிருந்த கொஞ்சநஞ்ச அனுதாபமும் இல்லாமல் போகத் தொடங்கிய காலகட்டம் அது. பாஸ்க் பகுதி மக்களே அவர்களை வெறுக்கத் தொடங்கினார்கள். இடி.ஏ.வின் பிட் நோட்டீஸ்களை டிஷ்யு பேப்பர்களாகக் கருதி, கை துடைத்து வீச ஆரம்பித்தார்கள். அவர்களது வீர அறிக்கைகள் ஏதாவது வெளிவந்தால், சர்தாம் போப்பா என்று தட்டிக்கொண்டு எழுந்துபோகத் தொடங்கினார்கள். பாஸ்க் மாகாண சட்டமன்றத்தில் தனி தேசம் குறித்து பெரிய அளவில் யாரும் பேசவேண் டாம் என்று உறுப்பினர்களுக்கு மக்கள் மன்றத்திலிருந்து வேண்டுகோள்கள் சென்றன. சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம், பாஸ்க் மக்களின் தனி அடையாளங்கள் பேணப்படுகிற பட்சத்தில், ஸ்பெயினின் ஆளுமையின்கீழ் தன்னாட்சி அதிகாரத்துடன் வசிப்பதே பாஸ்க் பிராந்திய மக்களுக்குப் பாதுகாப்பு என்று எழுதத் தெரிந்தவர்கள் லெட்டர்ஸ் டு தி எடிட்டர் பகுதிகளுக்கு எழுதினார்கள்.

இம்மாதிரியெல்லாம் இதற்குமுன் நிகழ்ந்ததில்லை. ஒரு பயம் இருக்கும். வீட்டுக்குள் புகுந்து காலி பண்ணிவிடுவார்களோ என்கிற பயம். வீதியில் முகமூடி போட்டுக்கொண்டு கொசு மருந்து அடிக்கிறவர்கள் போனால் கூட, சொய்யாவென்று வீட்டுக்கதவை இழுத்துச் சாத்திக்கொண்டு உள்ளே பதுங்கிக் கொண்டிருந்த மக்கள். ஏஞ்சல் படுகொலை அவர்களுக்கு ஒருவித பாதுகாப்பின்மையை உறுதி செய்தது.

ஐரோப்பிய யூனியனின் முக்கியமான உறுப்பு நாடு, ஸ்பெயின். அத்தனை சுலபத்தில் உள்ளூர் போராளிகள் யுத்தம் தொடங்குவதோ, ஆட்சியைக் கவிழ்ப்பதோ சாத்தியமில்லை. ஓர் அவசர ஆத்திரமென்றால் முன்பெல்லாம் இடி.ஏ.வுக்கு ரகசிய உதவிகள் செய்துவந்த பிரான்ஸும் இப்போதெல்லாம் வெளிப்படையாக

எதிர்ப்புத் தெரிவிக்க ஆரம்பித்திருக்கிறது. தவிரவும் மத்திய கிழக்குப் போராளி அமைப்புகளின் கரங்கள் நீண்டு ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஆசியா என்று எட்டுத் திக்கும் அதகளம் செய்யத் தொடங்கியிருக்கின்றன. அவர்கள் பொருட்டுச் செய்து வைத்திருக்கும் சிறப்புப் பாதுகாப்பு ஏற்பாடுகள், புல்லுக்கும் ஆங்கே பொசியத்தான் செய்யும்.

தவிரவும் நவீன ஐரோப்பிய சூழலில், குறிப்பாக ஸ்பெயினில் இ.டி.ஏ. கேட்கிற தனிநாட்டுக்கான அவசியத்தை அந்தப் பிராந்திய வாசிகள் தவிர வேறு யாரும் புரிந்து கொள்ளவோ, ஆதரிக்கவோ தயாராக இல்லை. அதற்கான அவசியம் என்னவென்பதே கூடச் சரியாகத் தெரியவில்லை. தலைவர் என்று ஒரு பிரகஸ்பதியின் திருமுகத்தைக் கூட மக்களோ, ஆட்சியாளர்களோ கண்டதில்லை. உருவமற்ற ஓர் அமைப்பின் கோரிக்கை... அது என்னதான் நியாயமாக இருந்தாலும் ஏற்கப்படுவதற்கான சாத்தியங்கள் குறைவு. யாரைக் கூப்பிட்டு உட்கார வைத்துப் பேசமுடியும்? பேச்சுவார்த்தைக்கான சாத்தியங்களே இல்லாத நிலையில், வெறும் போராட்டத்துக்கு விளைவு என்று ஒன்று எப்படி சாத்தியமாகும்?

இவ்வாறு பாஸ்க் பிராந்தியத்து மக்களே வெறுப்புற்று மாற்றி யோசிக்கத் தொடங்கியபோதும் இ.டி.ஏ.வின் நடவடிக்கைகளில் எந்த மாறுதலும் உண்டாகவில்லை. தன் கடன் கடத்துவது, கொல்வது, செய்தித்தாள் கதிமோட்சம் அடைவது என்கிற மூன்று அம்சக் கொள்கையை அப்படியே பேணிப் பாதுகாத்து வந்தார்கள். சிறிதும் பெரிதுமாகத் திட்டங்கள். பல திட்டங்கள் எதற்கு என்றே தெரியாமல் காணாமல் போயின. சில திட்டங்கள் சிறிய அளவில் வெடித்துச் சேதங்கள் உண்டு பண்ணின. காணாமல் போனாலும் செய்தி; கண்டுகொள்ளப்பட்டாலும் செய்தி.

1999 டிசம்பர் 21-ம் தேதி அதிகாலை இரண்டு முப்பது மணி இருக்கும். மாட்ரிடிலிருந்து வடக்கே போன நெடுஞ்சாலை ஒன்றில் ஹைவே செக்யூரிடி அதிகாரிகள் அரைத்தூக்கத்தில், போகிற வருகிற வாகனங்களைப் பரிசோதித்துக்கொண்டிருந்தார்கள். எப்போது டியூட்டி முடியும்; வீட்டுக்குப் போய் படுத்துத் தூங்கலாம் என்பதே ஒரே எண்ணம். களைப்பு, குளிர் மற்றும் அலுப்பு.

அந்த நேரத்தில் வாகனப் போக்குவரத்து அத்தனை அதிகம் இருக்காது. பெரும்பாலும் சரக்கு ஏற்றிச் செல்லும் லாரிகளும் பெட்ரோல் டாங்கர்களும்தான்.

‘சீக்கிரம் பாத்து அனுப்புப்பா. போய் ஒரு சாய் அடிச்சிட்டு வரலாம்’ என்று வரிசையில் செக் போஸ்ட் அருகே நின்றிருந்த வண்டிகளை பைசல் பண்ணிக் கொண்டிருந்தவர்கள், ஒரு குறிப்பிட்ட வேனை நெருங்கியபோது வினோதமாக உணர்ந்தார்கள். டிரைவர் முகத்தில் பதற்றம். தவிரவும் அவசரம்.

‘என்னய்யா போவுது வண்டில?’

‘கவிச்சிங்க. கொடோன்லேருந்து மார்க்கெட்டுக்குப் போவுதுங்க.’

‘ஆடா, மாடா?’

‘ரெண்டும் இருக்குதுங்க. ஐயாவுக்கு ஒரு கிலோ எடுத்து வெச்சிரட்டுங்களா? வூட்டுக்குப் போய் எண்ணெய் தேச்சிக் குளிச்சிட்டு, கொழம்பு வெச்சிக் குடிப்பீங்களாம்.’

‘தூத்தெரி. கதவத் தொறய்யா.’

அது கசாப்பு வண்டிதான். ஆனால் பார்சல் பெட்டிகளை நகர்த்தியபோது, டிரைவர் அதிகமாகப் பதறினான். மிரட்டியபோது தப்பிக்கப் பார்த்தான். இழுத்துப் பிடித்துக் கட்டிவைத்துவிட்டு ஆராயத் தொடங்கியபோது, ஆட்டுக்கறி டப்பாக்களின் அடியே வெடி மருந்துப் பெட்டிகள் இருந்தன. அதிர்ச்சியடைந்து ஒவ்வொரு பெட்டியாக எடுத்து வெளியே வைத்து டார்ச் அடித்துப் பார்த்தார்கள். கறி டப்பாக்களையும் கீழே கொட்டி ஆராய்ந்தார்கள். எடுக்க எடுக்க, வெடி டப்பாக்கள் வந்துகொண்டே இருந்தன. ஒன்று. இரண்டு. மூன்று. நான்கு. ஐந்து. பத்து. இருபது. ஐம்பது.

மொத்தம் 950 கிலோ வெடிமருந்துகள். கொஞ்சம் பாஸ்பரஸ். கொஞ்சம் ஜெலட்டின். கொஞ்சம் ஆர்.டி.எக்ஸ். நிறைய நாட்டுச் சரக்கு. அடக்கடவுளே, இதைக் குழம்பு வைத்துக் குடித்தால் என்னாவது?

'எலேய் களவாணிப் பயலே, ஆருடாநீயி?'

திரும்பி அந்த டிரைவரைக் கேட்டபோது, அவன் பதில் சொல்லவில்லை. ஒரே தாவு. அருகில் பாதுகாப்புக்கு இருந்த செக்யூரிடி ஆசாமியின் துப்பாக்கியைப் பிடுங்கி ஒரு சிறு தாக்குதல் முயற்சியில் ஈடுபடப் பார்த்தான். ஆனால், அதற்குள் பாய்ந்து அமுக்கிவிட்டார்கள். பரிசோதித்துப் பார்த்ததில் இ.டி.ஏ. பரமாத்மாக்கள் அனுப்பியிருந்த விவரம் வெளிவந்தது.

யார் அனுப்பியது? எங்கிருந்து வருகிறது? எங்கே போகிறது? என்ன திட்டம்?

ம்ஹூம். அவன் ஒரு டிரைவர். வெறும் டிரைவர். 'இ.டி.ஏ.வா? எனக்குத் தெரியாது. நான் சரக்கு வண்டி ஓட்டுபவன். சந்தைக்கு சரக்கு கொண்டுபோகச் சொல்லி ஏற்றினார்கள். எடுத்து வந்த பாவம் தவிர, வேறொன்றும் நானறியேன் வேதம் தமிழ் செய்த மாறன் சாட்சியாக.'

அன்றைய தினசரி செய்தித்தாள்களின் க்ரைம் பீட் ரிப்போர்ட்டர்கள் கடைசிச் செய்தி ஏதாவது இருக்குமா என்று ஸ்டேஷன் ஸ்டேஷனாக போன் அடித்து விசாரித்துக் கொண்டிருந்தார்கள். 'ஒன்றுமில்லை. தேசம் சுபிட்சமாக இருக்கிறது. தேனும் பாலும் ஓடாவிட்டாலும் தெய்வானுக்ரஹம் பரிபூரணமாக இருக்கிறது. ஒன்றும் பிரச்னையில்லை' என்று சொல்லிவிட்டார்கள்.

ஆனால், அந்த அவுட்டர் ஏரியாவில் மட்டும் பதற்றம் பற்றிக்கொண்டு தலைதெறிக்க ஆடிக்கொண் டிருந்தது. உடனடியாக உயரதிகாரிகளுக்குச் செய்தி பறந்து ஜீப்புகளிலும் சைரன் ஒலித்த கார்களிலும் அவர்கள் வந்து இறங்கி, மாட்டிய வேனைச் சுற்றிச் சுற்றி வந்து வியந்தார்கள். 950 கிலோ வெடிபொருள். உங்கப்பன் வீட்டுச் சொத்தா? எங்கப்பன் வீட்டுச் சொத்தா? எங்கே, எந்த இடத்தில் வைக்கவிருந்தார்கள்?

உடனடியாக அன்றைய நிகழ்ச்சிகள் அலசப்பட்டன. இதுதான் திட்டமா? மாற்றுத் திட்டங்கள் உண்டா? இ.டி.ஏ.தான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், என்ன நோக்கோடு செய்திருக்கிறார்கள். இத்தனை பெரிய சரக்கை என்ன தெனாவட்டு இருந்தால் நெடுஞ்சாலை வழியே வெறும் வேனில் ஏற்றி அனுப்புவார்கள். பாதுகாப்புக்கு ஒரு மொட்டை முகமூடியைக் கூடக் காணோம்?

டிரைவர் அழுதுகொண்டிருந்தான். 'ஐயா எனக்கு ஒண்ணும் தெரியாதுங்க. நான் அப்பிராணி. ஆளவிடுங்க.'

நோக்கத்தைப் பின் தொடர முடியவில்லை. சரக்கைப் பாதுகாப்பாக அனுப்பிவிட்டு, டிரைவரைக் கைதுசெய்து கொண்டு போனார்கள்.

அதிகாலைச் சமயம் என்பதால், செய்தித்தாள்கள் ஏறக்குறைய பக்கங்களை நிரப்பிவிட்டுப் பல் தேய்க்கப் போய்விட்டன. செய்தி வரவில்லை. அன்று மதியம் மூன்று மணி வாக்கில்தான் காவல் துறை விஷயத்தை வெளியே சொன்னது. 'நெடுஞ்சாலையில் அகப்பட்ட 950 கிலோ வெடிபொருள். டிரைவர் கைது. இ.டி.ஏ.வின் திட்டம் என்ன?'

கொட்டை எழுத்துகளில் மறுநாள் முதல் பக்கங்கள் நிரப்பப்பட்ட சமயத்தில் அதேபோன்ற இன்னொரு சம்பவம் அரங்கேறியிருந்தது.

அதே தேசிய நெடுஞ்சாலை. முந்தைய சம்பவம் நிகழ்ந்த ஜரகோஸா (Zaragoza) பகுதிக்குச் சற்றுத் தள்ளி, அடுத்த செக் போஸ்டில் இன்னொரு வேன் அன்றைய இரவு மடக்கப்பட்டது. இம்முறை மாட்டியது 750 கிலோ வெடிமருந்து.

ஆனால், வெறும் டிரைவர் அல்ல. முகமூடி அணிந்த ஏழெட்டு இ.டி.ஏ. வீரர்கள் சரக்குப் பெட்டிகளுக்கு இடையே பதுங்கியிருந்தார்கள். ஆளுக்கொரு கம்பளியைப் போர்த்திக்கொண்டு உருளைக்கிழங்கு மூட்டைகள் போல் உருண்டிருந்தார்கள். போலீஸ் தலை தெரிந்ததும் எழுந்து சுடத் தொடங்கினார்கள்.

உடனே சுதாரித்துக்கொண்ட செக்யூரிடி ஆபீஸர்கள் சைரன் ஒலித்து ஊரை எழுப்பி, கையோடு வயர்லெசில் தகவல் சொல்லி, நாலைந்து மூட்டை அரசாங்க உருளைக்கிழங்குகளையும் கையோடு வரவழைத்து விட்டார்கள்.

"la caravana de la muerte" (அழகுத் தமிழில் மரணவாகனம் எனலாம்) என்று மறுநாள் பேப்பர்கள் வருணித்த அந்தச் சம்பவத்தின் இறுதியில், அத்தனை இ.டி.ஏ.க்காரர்களையும் கொன்றுவிட்டு அந்த 750 கிலோ சரக்கையும் வெற்றிகரமாகப் பிடித்த ஸ்பெயின் காவல் துறை வெகுவாகப் பாராட்டப்பட்டது.

ஆனால், சம்பவம் நடந்த பல காலத்துக்கு இந்தச் சரக்கு எடுத்துச் செல்லப்பட்டதன் காரணம் தெரிய வரவேயில்லை. என்னென்னவோ யோசித்தார்கள். எப்படி எப்படியோ கணக்குப் போட்டுப் பார்த்தார்கள். மார்க்கெட் பகுதி, அரண்மனை, நாடாளுமன்ற வளாகம், கட்சி அலுவலகங்கள், காவல் நிலையங்கள் எதைத் தாக்க உத்தேசித்திருப்பார்கள்?

ம்ஹும். யூகிக்க முடியவில்லை. இ.டி.ஏ.வும் வாய் திறக்கவில்லை. பிறகு, 2001-ம் வருஷம் செப்டம்பர் 11-ம் தேதி அமெரிக்காவில் வர்த்தக மையக் கோபுரங்கள் அல் காயிதாவில் இடிக்கப்பட்டு, உலகம் முழுதும் பேசி மாய்ந்தபோது இ.டி.ஏ. தலைமை அசால்டாக ஓர் அறிக்கை வெளியிட்டது. இதென்ன பிசாத்து. நாங்கள் 1999-லேயே இப்படியொரு முயற்சியில் ஈடுபட்டோம். கொஞ்சம் பிசகிவிட்டது. அவ்வளவுதான்.

அவர்கள் குறிவைத்தது, மாட்ரிடில் உள்ள டோர் பிக்காசோ (Torre Picasso) என்கிற விண்ணளாவிய கட்டடம்.